QL

II - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

# பொதுத்தமிழ்

116291

மதிப்பெண்கள் : 90

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

I அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 X 1 = 14

1. கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள் - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

2. நன்னூல் ஒரு .............. நூலாகும்.
அ) முதல் நூல் ஆ) வழி நூல் இ) சார்பு நூல் ஈ) மொழிபெயர்ப்பு நூல்

3. அ. முத்துலிங்கம் `ஆறாம் திணை' - என குறிப்பிடும் நிலப்பகுதி எது?
அ) மலையும் மலை சார்ந்த பகுதியும் ஆ) பனியும் பனி சார்ந்த பகுதியும்
இ) கடலும் கடல் சார்ந்த பகுதியும் ஈ) காடும் காடு சார்ந்த பகுதியும்

4. `தகப்பன் கொடி' புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டு தமிழக அரசின் விருதினைப் பெற்றவர் ........................ .
அ) பெரியவன் கவிராயர் ஆ) பிரமிள்
இ) அழகிய பெரியவன் ஈ) இரா. மீனாட்சி

5. உழத்திப் பாட்டு என்று அழைக்கப்படும் சிற்றிலக்கியம் எது?
அ) பரணி ஆ) பிள்ளைத்தமிழ் ஈ) குறவஞ்சி ஈ) பள்ளு

6. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள் .................. .
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

7. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

8. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

PRANAY MOLLICK



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. கீழ்கண்ட கூற்றுகளுள் `திருக்குறளோடு' தொடர்பு இல்லாத ஒன்று ............ .

அ) குறள் வெண்பா - என்னும் பா வகையால் ஆனது

ஆ) ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசுவது

இ) சமண முனிவர்களால் இயற்றப்பட்டது

ஈ) உலகப் பொதுமறை என்று போற்றப்படுவது

10. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

11. துணையாய் வருவது தூயநற் கல்வி - என்னும் தொடர் இடம் பெறும் நூல் ................ .

அ) நாலடியார் ஆ) திருக்குறள் இ) ஆத்திச்சூடி ஈ) திருமந்திரம்

12. **சரியானதைத் தேர்ந்தெடுக்க.**

அ) வரை-மலை ஆ) வதுவை - திருமணம் இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்

i) அ,ஆ,இ - சரி. ஈ - தவறு ii) ஆ,இ,ஈ - சரி. அ - தவறு

iii) அ,இ,ஈ - சரி. ஆ - தவறு iv) அ,ஆ,ஈ - சரி. இ - தவறு

13. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

14. `Shell seeds' - என்பதன் கலைச்சொல் .................. .

அ) ஒட்டு விதை ஆ) அறுவடை இ) இயற்கை வேளாண்மை ஈ) தொழு உரம்

**பகுதி - II பிரிவு - 1**

**II எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. தமிழர்கள் புகழ் பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

17. இங்கே ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் - என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு மட்டும்.** 2 X 2 = 4

19. தமிழ் நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 2 X 7 = 14

22. **இலக்கண குறிப்பு எழுதுக.**

அ) செங்கயல் ஆ) ஆடுகம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) புகழெனின் ஆ) சிறுகோல்

24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) பொரி, பொறி ஆ) கனை, கணை

26. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.
அ) எட்டுவரை. *(அல்லது)* ஆ) தங்கை

28. பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) துஞ்சல் *(அல்லது)* ஆ) ஈன்ற.

29. ஞாலம் கருதினும்...................... காலம்
கருதி ................. செயின். - விடுபட்ட சொற்களை நிரப்புக.

30. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.
அ) வருடம் ஆ) வாக்கியம்.

## பகுதி - III பிரிவு - 1

III எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 4 = 8

31. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?
32. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. தமிழ்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
34. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" - உவமையைப் பொருளுடன் விளக்குக.

## பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது ............ என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. 'வாளினும் வலிமையானது மொழி' - என்னும் கூற்றினை இந்திரன் எவ்வாறு விளக்குகிறார்?

## பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 X 4 = 12

39. அ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. - குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. *(அல்லது)*
ஆ) சொல் பின்வரும் நிலையணி - விளக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

40. இலக்கிய நயம் பாராட்டுக.

சீரிய நெற்றி எங்கே?
சிவந்தநல் இதழ்கள் எங்கே?
கூரிய விழிகள் எங்கே?
குறுநகை போன தெங்கே?
நேரிய பார்வை எங்கே?
நிமிர்ந்தநன் னடைதான் எங்கே?
நிலமெலாம் வணங்கும் தோற்றம்
நெருப்பினில் வீழ்ந்த திங்கே? – கண்ணதாசன்

41. பொதுவியல் திணையை விளக்குக. (அல்லது)
மகள் நிலை உரைத்தல் – துறையை விளக்குக.

42. வேர்ச் சொல்லை – 1) வினைமுற்று 2) பெயரெச்சம் 3) வினையெச்சம்
4) வினையாலணையும் பெயராக மாற்றுக. அ) பேசு (அல்லது) ஆ) பாடு

43. தமிழாக்கம் தருக.
1) Education is the most powerful weapon, which you can use the change the world.
2) Culture does not make people, people make culture.
3) A picture is worth a thousand words.
4) Knowledge rules the world.

## பகுதி - IV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 X 6 = 18

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க. (அல்லது)
ஆ) மதினா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுபுலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. (அல்லது)
ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

46. அ) சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே – என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக. (அல்லது)
ஆ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

## பகுதி - V

V அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4 + 2 = 6

47. அ) 'அம்ம வாழி' – எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'கொளல்' – என முடியும் குறட்பாவை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com